12.08.2024.
CC.No. 103/2022
ம.சா.1 திருப்பதி ராஜன்
<u>குறுக்குவிசாரணை</u>

1) எதிரியை எப்போதிலிருந்து தெரியும் என்றால் சிறுவயது முதல் பழக்கம் மேலும் தொழில் ரீதியாகவும் தெரியும். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். என் அப்பா செய்து வருவதால் நானும் அதே தொழில் செய்து வருகிறேன். நான் அப்பாவிற்கு பிறகு இந்த தொழிலுக்கு வந்தேனா என்றால் அதற்கு முன்பே வந்துவிட்டேன். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2011ம் வருடம் நடைபெற்றது. எங்கள் திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். எனது திருமணம் பெற்றோர் சம்மதத்துடன் நடக்கவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னர் ஏற்றுக்கொண்டார்கள். எங்கள் திருமணத்தை என் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

2) நான் எதிரியுடன் அக்ரிமெண்ட் செய்தபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் சக்தி என்பவரும் எதிரியின் நண்பர் ஒருவரும் இருந்தனர். மேற்படி அக்ரிமெண்ட் போடும்போது என் அப்பா 05.01.2021ல் ரூ. 10 லட்சமும், பின்னர் 25.02.2021ல் ரூ.10 லட்சமும் ரொக்கமாக கொடுத்தார். தொகை கொடுத்த நேரத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் முதன் முறை நான் அப்பாவுடன் இருந்தேன். இரண்டாவது முறை பணம் கொடுத்தபோது என் அப்பாவும், சக்தி என்பவரும் உடன் இருந்தனர். என் அப்பா வீடு கட்டி விற்கும் தொழிலும் செய்து வந்தார். என் அப்பாவின் வரவு செலவு கணக்கு வங்கி மூலம் செய்வார் என்றால் சரியல்ல. என்

அப்பாவுடன் எதிரி அக்ரிமெண்ட் போடும்போது நான் உடன் இருக்கவில்லை என்றாலும், பின்னர் இடத்தை 3 மாதத்தில் வாங்கமுடியாது என்று முன் தொகை ரூ. 10 லட்சத்தை வாங்கி சென்றார் என்றால் சரியல்ல. இடத்திற்கான ஆவணங்கள் பதிவு செய்வதற்கு முறையாக இல்லாததால் அதை சரி செய்வதாக கூறி எதிரி காலம் கடத்தி வந்ததால் பதிவு செய்யமுடியவில்லை. முன்பணம் எதையும் எதிரி திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை.

3) அக்ரிமெண்ட்டை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அக்ரிமெண்ட்டை தாக்கல் செய்தால் வழக்கின் உண்மை விபரம் தெரியவரும் என்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். ரூ. 10 லட்சம் தொகையை 25.02.2021ல் என் தகப்பனாரிடம் கொடுத்து அது வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பணத்தை திரும்ப செலுத்தியதற்கு சாட்சிகளை விசாரரிக்க எனக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்றால் இல்லை. எதிரி என் தகப்பனாரிடம் ரூ. 10 லட்சத்தை திரும்ப செலுத்தும்போது என் அப்பாவிற்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்ததால் பணத்தை செலுத்திவிட்டு வரவு வைத்துவிட்டு வந்தோம் என்றாலும், அதை சாதகமாக பயன்படுத்தி நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

4) எனக்கு தலக்காவூரில் 2 ஏக்கர் 90 செண்ட் இடம் இருக்கிறது. தலக்காவூர் பஞ்சாயத்து கீரணிப்பட்டியில் எனக்கு இடம் இருந்ததா என்றால் இருந்தது. எதிரியை என் தகப்பனாரின் இறப்பிற்கு

வந்தபோதுதான் தெரியும் என்றாலும் அதற்கு முன்பு தெரியாது என்றாலும் சரியல்ல. நான் கீரனிபட்டியில் உள்ள இடத்தை விற்பதற்காகத்தான் எதிரியை நான் சந்தித்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அந்த இடத்தை விற்பனை செய்வதை எதிரியே வாங்கி கொள்வதாக கூறி ரூ. 10 ஆயிரம் முன்பணமும், 2 காசோலைகளையும் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதன் பின்னர் அந்த இடத்தை வேறு நபர்கள் அதிக தொகைக்கு வாங்கிக்கொள்வதாக கூறியதால் அதை வேறு நபருக்கு விற்றுவிட்டேன் எனறால் சரியல்ல.

5) எதிரி மேற்படி பணத்தையும் காசோலைகளையும் திரும்ப கேட்டபோதும் திருப்பி தராமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் புகாரில் சொல்லியுள்ள சாட்சிகள் யார் என்றால் கணேசன் மற்றும் சிவா. என் தகப்பார் காலத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் போது உடன் இல்லை என்ற காரணத்தால் என்னிடம் கொடுக்கப்பட்ட காசோலையை அந்த மேற்படி ஒப்பந்தத்துடன் சேர்த்து பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த தொகையும் கொடுக்க கட்டுப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.